# மெய் எழுத்துக்கள் வகைகள்

# மெய்யெழுத்துக்கள் வகைகள்

மெய்யெழுத்துக்கள் மூன்று வகைப்படும் அவை :-

1. வல்லினம்
2. மெல்லினம்
3. இடையினம்

## வல்லினம் :-

வன்மையாக ஒலிக்கும் எழுத்துக்களே வல்லினம் ஆகும்.

வல்லினம் :. க் , ச், ட், த், ப், ற்.

சான்று :-

சக்கரம்

பச்சை

மட்டை

மத்தளம்

கப்பல்

சுற்றம்

## மெல்லினம் :-

மென்மையாக ஒலிக்கும் எழுத்துக்களே மெல்லினம் ஆகும்.

**மெல்லினம் :- ங் ,ஞ், ண், ந், ம், ன்.**

சான்று :-

சங்கு

மஞ்சள்

நண்டு

சந்தை

மாம்பழம்

பன்னீர்

## இடையினம் :-

வன்மைக்கும், மென்மைக்கும் இடையில் ஒலிக்கும் எழுத்துக்களே இடையினம் ஆகும்.

இடையினம் :- ய், ர், ல், வ், ழ், ள்.

சான்று :-

பாய்

தேர்

பல்லி

செவ்வாழை

தாழ்வாரம்

பள்ளம்

# வினாக்கள்:-

1. மெய் எழுத்து எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. மெல்லினம் எப்படி ஒலிக்கும்?
3. மெய் எழுத்துக்கள் எத்தனை எழுத்துக்கள்?
4. 'க்' என்னும் மெய் எழுத்து எந்த வகையில் வரும்?
   அ)வல்லினம் ஆ)மெல்லினம் இ)இடையினம்
5. வன்மைக்கும் மென்மைக்கும் இடையில் இடையினம் ஒலிக்கும்.
   (சரி/தவறு)